**OS.101/2024**

**நாள். 07.04.2026.**

**வா.சா. 1 – கிரிவாசன்**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

எங்கள் வங்கி இந்திய ரிசர்வ் வங்கியின் ஏவுரைகளுக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். எங்கள் வங்கி பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கை தாக்கல் செய்த மேலாளருக்கு எங்கள் வங்கி சிறப்பான அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வங்கி சார்பாக நான் சாட்சியம் அளிப்பதற்கு எங்கள் வங்கி நிர்வாகம் அதிகாரம் வழங்கியுள்ளது என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கை எங்கள் வங்கி 30.06.2021 அன்று தாக்கல் செய்துள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யும்போது எங்கள் வங்கி பிராதில் கோரியுள்ள தொகைக்கு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதால் பிராதை திருப்பியுள்ளது என்றால் சரிதான். எங்கள் வங்கியின் சார்பாக வழக்கு தாக்கல் செய்யும்போது சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதால், பின்னிட்டு செலுத்துவதற்கு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கு பிராது 07.07.2021ம் தேதி நீதிமன்ற கட்டணம் மற்றும் வேறுசில குறைகளை நிவர்த்தி செய்வதற்காக திருப்பியுள்ளது என்றால் சரிதான். 13.08.2021ம் தேதி பிராதை மீண்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 13.08.2021ம் தேதி பாக்கி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு செலுத்தும்போதும் நீதிமன்ற முன்அனுமதி பெறாமல் செலுத்தியுள்ளோம் என்றால் சரிதான். தாவா வழக்கை தாக்கல் செய்யும்போது சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி

செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதியும், வாதி வங்கியும் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்த தவறும்பட்சத்தில் ஒரு இசைவுதீர்வாளர் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என சரத்து உள்ளது என்றால் சரிதான். இசைவு தீர்வாளரை நியமித்து பிரதிவாதியிடமிருந்து கடனை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க எங்கள் வங்கி முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். 31.05.2018 ம் தேதி எங்கள் வங்கி பிரதிவாதிகளுக்கு கடன் வழங்கியுள்ளது என்றால் சரிதான். 31.05.2018 அன்றுதான் பிரதிவாதிகள் கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள் என்றும், அன்றைய தேதியிலேயே அவர்களுக்கு கடன் வழங்கலாம் என எங்கள் வங்கி இசைவு தெரிவித்து கடிதமும் வழங்கியுள்ளது என்றால் சரிதான். பொதுவாக வங்கி கடன் கொடுத்தால் கடன் கொடுத்த தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் அந்த கடனை வரப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் இந்த கடனுக்கு 60 மாதங்கள் வரை திருப்பி செலுத்தும் காலம் உள்ளதால் 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்யாவிடினும் காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்படாது. பிரதிவாதி எங்களிடம் கடன் வாங்கிய தேதியிலிருந்து ஒருதவணைகூட திருப்பி செலுத்தவில்லை என்பதுதான் எங்கள் வழக்கு என்றால் சரிதான். முதல் தவணை 01.07.2018 ம் தேதி செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் முதல் தவணையிலிருந்து வழக்கு தாக்கல் செய்யும் காலம்வரை எந்த தவணையும் செலுத்தவில்லை என்பதால் தாவா வழக்கு காலவரையறை சட்டத்தின்கீழ் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா கடன் மூலம் வாங்கிய நான்கு சக்கர வாகனத்தை எங்கள் வங்கி கைப்பற்றிக்கொண்டது என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனத்தை விற்பனை செய்யவேண்டும் என்றால் பிரதிவாதிகளுக்கு முன்னறிவிப்பு கொடுத்துதான் விற்பனை செய்யவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு விற்பனை செய்யும்போது ஏலத்தில் பிரதிவாதிகள் அதிகதொகை கேட்கும்பட்சத்தில்

பிரதிவாதிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில உள்ள வாகனத்தை கைப்பற்றுவதற்கு முன்பு எங்கள் வங்கி பிரதிவாதிகளுக்கு கடனை திருப்பி செலுத்துமாறு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வாகனத்தை கைப்பற்றிய பிறகு, விற்பனை செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எங்கள் வங்கி சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதில் 1ம் பிரதிவாதி பெயரில் இருந்த வாகனம் எவ்வளவு மதிப்புடையது, எவ்வளவு தொகைக்கு ஏலம்போனது, அதற்கு பிறகு பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு செலுத்தவேண்டிய தொகை எவ்வளவு என பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 07.12.2020ம் தேதி 1ம் பிரதிவாதியின் வாகனத்தை விற்பனை செய்வதற்கு முன்பாக அந்த வாகனத்தின் மதிப்பு குறித்து தகுதிவாய்ந்த பொறியாளரிடம் சான்று பெறவில்லை என்றால் சரிதான். எங்கள் வங்கியில் ஒவ்வொரு ஆண்டும் கணக்கு தணிக்கை நடைபெறும் என்றால் சரிதான். அவ்வாறு கணக்கு தணிக்கை செய்யும்போது 31.05.2018 அன்று 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட கடனும் தணிக்கை செய்யப்பட்டது என்றால் சரிதான். ஏற்கனவே 1ம் பிரதிவாதி எங்கள் வங்கியில் வாங்கியுள்ள கடனுக்கும், தாவா வழக்கில் பெற்ற கடனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். ஏற்கனவே 1ம் பிரதிவாதி வாங்கிய கடனை திருப்பி செலுத்தவில்லை என்பதால் அவரது சொத்தை ஜப்தி செய்து Sarfaesi Act நடவடிக்கை மூலம் விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரிதான். எங்கள் வங்கியில் கடன் வாங்கி முறையாக செலுத்தாத 1ம் பிரதிவாதிக்கு மீண்டும் ஒருகடன் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான கார் 07.12.2020ம் தேதி விற்பனை செய்யும்போது நல்ல மதிப்புடையதாக இருந்தது என்றும், ஆனால் எங்கள் வங்கி 1ம் பிரதிவாதிக்கு தெரிவிக்காமல் குறைந்த விலைக்கு விற்பனை செய்து 1ம் பிரதிவாதிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் வங்கி சார்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 11 வரையிலான

ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள வட்டி விகிதத்தை பிரதிவாதிகள் செலுத்துவதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும்போது ஒப்புக்கொண்ட வட்டிவிகிதத்தை நிரப்பிக்கொள்ளாமல் பிரதிவாதிகளிடம் நிரப்பப்படாத ஆவணங்களை கையெழுத்து பெற்றுக்கொண்டு பின்னிட்டு கூடுதலாக பிராதில் சொல்லியுள்ள வட்டிவிகிதத்தை நிரப்பிக்கொண்டோம் என்றால் சரியல்ல. எங்கள் வங்கி, வங்கி நடைமுறைக்கு விரோதமாகவும், ரிசர்வ் வங்கியின் ஏவுரைகளுக்கு விரோதமாகவும், 1ம் பிரதிவாதியின் வாகனத்தை கைப்பற்றி அவர்களுக்கு தெரியாமல் விற்பனை செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. பிராதில் கோரியுள்ள தொகையான ரூ.9 இலட்சம் மற்றும் அதற்கு செலுத்த வேண்டிய பின்வட்டியை பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.